# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.
## Case No. CC.No. 15 of 2024
## Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** முத்துசாமி | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A2 Present)**

**Dated.04.06.2026**

**முதல் விசாரணை**

நான் சிறுகனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயகுமார், புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் ராமலிங்கம் ஆகியோர்களுடைய கையொப்பங்கள் நன்கு பரிட்சயம் பெற்றதாலும் ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்காக சாட்சியமளிக்கிறேன். கடந்த 24.03.2024 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயகுமார் என்பவர் காலை 11 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 52/2024, இதச பிரிவு, 392 ன் கீழ் வழக்கினை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7/அ.சா.5** ஆகும். பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். கடந்த 24.03.2024 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு சம்பவ

இடம் சென்று சாட்சிகள் பிரகாஷ், வினோத் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.8/அ.சா.5** ஆகும். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9/அ.சா.5** ஆகும். பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 வரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 24.03.2024ம் தேதி திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கொணலை திருச்சி இன்ஜினியரிங் கல்லூரி அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது, திருசசி–சென்னை நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் போலீசாரை பார்த்ததும் தப்பி ஓட முயன்றவர்களை பிடித்து விசாரணை செய்த போது இவ்வழக்கின் எதிரிகள் ரோகித், கோகுல் என தெரிய வந்ததால் எதிரிகளை 15 மணிக்கு குற்ற காரணம் கூறி இருவரையும் கைது செய்த போது 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ரமேஷ், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10/அ.சா.5** ஆகும். பின்பு 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த ஐபோனையும், வழக்கு சம்பவத்தில் பயன்படுத்திய பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தையும் 16.30 மணிக்கு மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.11/அ.சா.5**

ஆகும். கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களான

1. கருப்பு நிற பஜாஜ் பல்சர் 220F இருசக்கர வாகனம் (முன்னும், பின்னும் பதிவெண் இல்லாத வாகனம்), Chasis No. MD2A13EX3PCH25090

2. வெளிர் நீல நிற ஆப்பிள் ஐபோன் ஒன்று.

ஆகியவற்றை படிவம் எண். 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் எண். 91 **அ.சா.ஆ.12/அ.சா.5** ஆகும். கருப்பு நிற பஜாஜ் பல்சர் 220F இருசக்கர வாகனம் (முன்னும், பின்னும் பதிவெண் இல்லாத வாகனம்), Chasis No. MD2A13EX3PCH25090 **சா.பொ.1** ஆகும். வெளிர் நீல நிற ஆப்பிள் ஐபோன் ஒன்று **சா.பொ.2** ஆகும். பின்பு எதிரிகளை நிலையம் கொண்டு திரேக பரிசோதனை செய்துள்ளார். பின்பு எதிரிகளுக்கு இலால்குடி அரசு மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்ட போது எதிரி ரோகித் என்பவரை திருச்சி அரசு மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு எதிரி ரோகித் என்பவர் திருச்சி அரசு மருத்துவமனையில் வைத்து மாலை 6 மணியளவில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவ்வழக்கின் 2ம் எதிரி கடந்த 25.03.2024ம் தேதி காலை 11.45 மணியளவில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பின்பு பட்டியல் சாட்சிகளான 6, 7, 8 ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவு, 392ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக பரிசீலனை செய்யாமல், வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் யாரையும் நேரடியாக விசாரிக்காமல், நிலையத்திலிருந்து அறிக்கை தயாரித்து, எதிரி மீது பொய்யாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகள் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யப்படவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ ஒரு நபர் போனை பறித்து சென்றதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

ஒப்பம்/−சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.04 17:03:20 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி